2017 ஜுலை 12]

மின்னூட்ட மின்மாற்றி L.T.C.T. மின்னிணைப்பில் 112 கிலோ வோல்ட் மின் திறன் உள்ளதாக இருக்கிறது. பொது மக்களின் அத்தியாவசிய பொருளான அரிசி உணவைத் தயாரிக்கும் நவீன அரிசி ஆலைகளில், 150 கிலோ வோல்ட் மின் திறன் கொண்ட மின்மாற்றிகளை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியபடி, அந்த அரிசி ஆலைகளில் மின் பளுவின் தேவைக்கேற்ப, அதை உடனடியாக அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு, மாற்றி அமைத்துத்தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 184, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) அமைதியாக இருங்கள், வாய்ப்புக் கிடைக்கும்.*

184—

ஊராட்சி ஒன்றியத்தைப் பிரித்தல்

***614—திரு. க. சுந்தர்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உத்திரமேரூர் தொகுதி, உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்கும்பொருட்டு, சாலவாக்கத்தைத் தலைமையிடமாகக் கொண்டு, ஒரு புதிய ஊராட்சி ஒன்றியத்தை உருவாக்கிடக் கோரும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரின் கருத்துருவின்மீது ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் பரிந்துரை பெறப்பட்டு, அது அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர் அவர்கள்.

திரு. க. சுந்தர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம் 73 ஊராட்சிகளை உள்ளடக்கிய, தமிழ்நாட்டில் உள்ள மிகப் பெரிய ஊராட்சி ஒன்றியமாகும். அதை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கையை நானே இந்த மாமன்றத்தில் 1989 ஆம் ஆண்டு முதல் இன்று வரை வினாக்களாகவும், கோரிக்கைகளாகவும் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப்போல், அது பரிசீலனையில் உள்ளது என்பது உண்மைதான். அதே நேரத்தில், அதை இரண்டாகப் பிரிப்பதற்கு எல்லாவிதமான வசதிகளும் உள்ளன. இரண்டு மாவட்ட ஊராட்சிக் குழுக்கள் உள்ளன. 38 ஊராட்சிகள் கொண்ட ஒரு மாவட்ட ஊராட்சி வார்டு எண் 19, சாலவாக்கம் பகுதியிலே 35 ஊராட்சிகளைக்கொண்ட வார்டு எண் 20 என இரண்டு மாவட்ட ஊராட்சிக் குழுக்கள் உள்ளன. அந்த இரண்டையும் தனித் தனியாகப் பிரித்தால் நன்றாக இருக்கும்.

ஏற்கெனவே 1992 ஆம் ஆண்டில், உங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் இந்தக் கேள்வி எழுப்பப்பட்டு, அன்றைக்கு இருந்த உள்ளாட்சித் துறை அமைச்சர் மறைந்த திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் ஊராட்சி ஒன்றியம் இரண்டாகப் பிரிக்கப்படும் என்று இதே அவையில் அறிவித்தார்கள். எனவே, அந்த உறுதிமொழியைக் காக்கின்ற வகையிலே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை வேகப்படுத்த வேண்டும். இரண்டு ஆண்டுகளுக்கு முன்புகூட நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், இதுசம்பந்தமாக கருத்துக் கேட்புக் கூட்டத்தை நடத்தி, அதில் ஏற்போரே அதிகம், மறுப்போரே இல்லையென்கின்ற வகையிலே தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அது

2017 ஜூலை 12]

அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி, கோரிக்கையை இந்த ஆண்டே நிறைவேற்றுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 1989 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து கோரிக்கை வைத்துக் கொண்டிருப்பதாகச் சொன்னார். உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம், தமிழ்நாட்டிலேயே மிக அதிகமான, அளவில் 73 கிராம ஊராட்சிகளைக் கொண்டிருக்கிறது. மேலும் இந்த ஊராட்சி ஒன்றியம் 376.58 சதுர கிலோ மீட்டர் பரப்பளவைக் கொண்ட பெரிய ஒன்றியமாகும். காஞ்சிபுரம் மாவட்டத்தில் மிகப் பெரிய பரப்பளவைக் கொண்ட ஊராட்சி ஒன்றியமாகத் திகழும் உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிப்பது குறித்து அன்றைக்குப் பேசும்போது நீங்கள் கேட்டுக்கொண்டபடியே, அதிகாரிகளும் கருத்துருவைக் கொடுத்து, அவ்வாறே எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. அரசாணை எண் 131, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 16–3–2007–ல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளைப் பின்பற்றி, உத்திரமேரூரைத் தலைமையிடமாகக் கொண்டு 38 ஊராட்சிகள் கொண்ட உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தையும், சாலவாக்கத்தைத் தலைமையிடமாகக் கொண்டு 35 ஊராட்சிகள் கொண்ட சாலவாக்கம் ஊராட்சி ஒன்றியத்தையும் அமைக்க, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களால் அனுப்பப்பட்ட கருத்துருவின்மீது, ஊரக வளர்ச்சி இயக்குநர் அவர்களின் பரிந்துரை பெறப்பட்டு, அது அரசின் பரிசீலனையில் உள்ளது. இதற்கு முன்னர் 1989–ல் கோரிக்கை வைத்ததாகவும், 1992–ல் வாக்குறுதி அளிக்கப்பட்டதாகவும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இந்தக் கோரிக்கை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுசெல்லப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலான மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் கண்டிப்பாக நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர் அவர்கள்.

திரு. க. சுந்தர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய மாவட்டங்களையும் வருவாய் வட்டங்களையும் பிரிப்பதிலே நாம் மிகுந்த கவனத்தோடும், ஆர்வத்தோடும் செயல்பட்டு வந்திருக்கின்றோம். அந்த வகையிலே, தமிழ்நாட்டிலே பல ஊராட்சி ஒன்றியங்கள் 50–க்கும் மேற்பட்ட ஊராட்சிகளைக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக, காஞ்சிபுரம் மாவட்டத்திலேயே, வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம் 61 ஊராட்சிகளையும், அச்சரப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம் 59 ஊராட்சிகளையும், மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியம் 58 ஊராட்சிகளையும், ஸ்ரீபெரும்புதூர் ஊராட்சி ஒன்றியம் 50–க்கும் மேற்பட்ட ஊராட்சிகளையும் கொண்டிருக்கின்றன. எங்கள் கட்சியின் கொறடா அவர்கள்கூட 22 ஆண்டுகாலமாக இந்த அவையிலே அவருடைய ஊராட்சி ஒன்றியத்தைப் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்துக்கொண்டிருக்கிறார். எனவே, தமிழ்நாட்டிலே இதுபோன்ற பெரிய ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதற்கு முன்னால் பேசும்போதுகூட, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட ஊராட்சி ஒன்றியத்தில் அனைத்து norms–ம் சரியாக இருக்கின்றன. கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்தப்பெற்றிருக்கிறது என்பதைத் தெரிவித்தேன். ஊராட்சிகளைப் பிரிப்பது குறித்து, அரசாணை எண் 131, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 16–3–2017–ல் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அதன் அடிப்படையிலே ஊராட்சிகளைப் பிரிப்பது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அரசுக்கு கருத்துரு அனுப்புவதற்கு முன் சில நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர்கள், ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட

2017 ஜூலை 12]

தலைவர்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் மாவட்டச் செயலாளர்கள், பெயர் பெற்ற தன்னார்வ தொண்டு அமைப்புகள், குடியிருப்போர் நலச் சங்கங்கள் ஆகியோருடன் முதல் கூட்டத்தை நடத்த வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர் இரண்டாவது கூட்டத்தில் பெறும் கருத்துருக்களைப் பரிசீலனை செய்யவேண்டும். தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகளின் கருத்துகள் தனித் தனியாகக் கேட்கப்படும். மேலும், அரசியல் கட்சிகள் மற்றும் கோரிக்கைகள் அளித்துள்ளவர்களின் கருத்துகளும் கேட்கப்படும். மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலான குழுவிடம் தெரிவிக்கப்படும் கருத்துகளின் அடிப்படையில், மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரைகளின்மீதான கருத்துரு தயாரிக்கப்பட்டு, ஊரக வளர்ச்சித் துறை இயக்குநருக்கு அனுப்பப்பட வேண்டும். தேவைப்பட்டால், ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் மாவட்ட அளவில் 3-வது கூட்டத்தையும் கூட்டி, கருத்துருவின் மீதான விண்ணப்பத்தைப் பெற்று, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பலாம். மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்படும் கருத்துருவை ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் தனது பரிந்துரையுடன் அரசுக்கு அனுப்ப வேண்டும். அவ்வாறு அனுப்பப்படும் கருத்துருவை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கனிவுடன் பரிசீலிக்கும். அப்படி அனுப்பப்பட்டிருக்கக்கூடிய கருத்துரு, norms-படி அனைத்தும் சரியாக இருந்தால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கனிவான கவனத்திற்குக் கொண்டு சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பழனியப்பன் அவர்கள்.*

திரு. பெ. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 5 ஆண்டு ஆட்சிக் காலத்தில் தருமபுரி மாவட்டத்திலுள்ள பெரிய ஊராட்சி ஒன்றியமாக இருந்த மொரப்பூர் ஊராட்சி ஒன்றியத்தைப் பிரித்து, புதியதாக கடத்தூர் ஊராட்சி ஒன்றியத்தை அறிவித்திருந்தார்கள். அதேபோல பெரிய ஊராட்சி ஒன்றியமாக இருந்த பெண்ணாகரத்தையும் பிரித்து, ஏரியூரை மையமாக வைத்து ஒரு புதிய ஊராட்சி ஒன்றியத்தை அறிவித்தார்கள். ஆகவே, உள்ளாட்சித் தேர்தல் முடிந்த பின்புதான் நிருவாக ரீதியாக அது நடைமுறைக்கு*

வரும் என்பது நம்மைப் போன்றவர்களுக்கு நன்றாகத் தெரியும். அந்த வகையிலே, தேர்தல் வருவதற்கு முன்கூட்டியே அந்த இரண்டு ஒன்றியத்திற்கும், அதாவது கடத்தூர் ஒன்றியத்திற்கும், ஏரியூர் ஒன்றியத்திற்கும் புதியதாக இடத்தைத் தேர்வு செய்து, அரசு மூலமாகக் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அமைச்சராக இருந்தவர். அவர் சொன்னது உண்மைதான். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் அரசாணை எண் 176, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 9–12–2013, தருமபுரி மாவட்டத்திலுள்ள பெண்ணாகரம் மற்றும் மொரப்பூர் ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து, புதியதாக ஏரியூர் மற்றும் கடத்தூர் என்ற இரண்டு புதிய ஊராட்சி ஒன்றியங்களை உருவாக்கிட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணை வெளியிட்டார்கள். மேலும், அரசாணை எண் 97, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 5–8–2016–ன்படி கடலூர் மாவட்டத்தில் ஸ்ரீமுஷ்ணத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியத்தை ஏற்படுத்த ஆணையிடப்பட்டது. இந்த மூன்று புதிய ஊராட்சி ஒன்றியங்களையும் உள்ளாட்சித் தேர்தல் நடைபெறுவதற்கு முன் செயல்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்போது புதியதாகப் பிரிக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களுக்கு புதிய கட்டடங்கள் வேண்டுமென்று கேட்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 185, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார், மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.